

# குடியியல்

அலகு 02

## அதிகாரத்தை பன்முகப்படுத்தலும் பகிர்ந்தளித்தலும்


திருமதி.மு.வசந்தினி

கே/ தெஹி / சரஸ்வதி த.ம.வி

மியனவிட்ட

# 02.அதிகாரத்தை  பன்முகபடுத்தலும் பகிர்ந்தளித்தலும்

## ❖ அதிகாரம்

அரசின் ஆட்சி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அரசுக்கு உள்ள ஆற்றல்

மக்களிடம் காணப்படும் அதிகாரம் இறைமை

அதிகாரம் பல வகைப்படும்

- அரசியல் அதிகாரம்
- சமூக அதிகாரம்
- பொருளாதார அதிகாரம்

அதிகாரத்தை பன்முகப்படுத்தல்

மத்திய அரசிடம் உள்ள நிர்வாக அதிகாரங்கள் சிலவற்றை பிராந்திய நிர்வாக அலகுகலிடம் கையலித்தலாகும்.

அதிகாரத்தை அறிமுகப்படுத்தும்போது காணக்கூடிய இயல்புகள்

01. மத்திய அரசின் சட்டத்துறை அனுமதிக்கப்பட்ட மசோதா மூலம் செயல்படுத்தப்படும்
02. மத்திய அரசு திரும்பப் பெற்றுக் கொள்ள முடியும்.

## ➢ ஒற்றையாட்சி

அரசின் சட்டம் நீதி நிர்வாகம் எனும் ஒற்றுமை அதிகாரங்களும் ஒரு மத்திய அரசினால் ஏற்படுத்தப்படும் ஆயின் அரசு ஒற்றையாட்சி ஆகும்.

| |
|---|
| எல்லா வகையிலும் அரசியல் அதிகாரம் ஒரு மத்திய நிறுவனத்தின் உள் குவிந்து இருப்பின் அது ஒற்றையாட்சி ஆகும்.- |
| பேராசிரியர் ஹார்மன் தே ∴பைனர் |

## ➢ ஒற்றையாட்சியின் பண்புகள்

- அரசின் சட்டத்துறை நீதித்துறை நிறைவேற்றுத்துறையின் அதிகாரங்கள் ஒரு மத்திய அரசினால் மாத்திரம் நடைமுறைப்படுத்த படுதல்
- மத்திய அரசின் சில அதிகாரங்கள் பிராந்தி நிர்வாக அலுவலர்களிடம் ஒப்படைத்தல்
- மத்திய அரசின் சட்டத்துறை மூலம் நிறைவேற்றப்படும் சட்டம் ஒன்றின் மூலம் மாத்திரம் அதிகாரம் பன்முகப்படுத்தல்.
- மத்திய அரசுக்கு தேவையான சந்தர்ப்பத்தில் பன்மகப படுத்தப்பட்ட நிர்வாக அதிகாரங்களை மீண்டும் பெறுதல

## ❖ அதிகாரத்தை பகிர்ந்து அளித்தல்

அரசின் சட்டத்துறை நிறைவேற்றுத் துறை நீதித்துறை அதிகாரங்களை அரசியல் யாப்பின் மூலம் பிராந்தி ஆட்சியாளர்களிடம் ஒப்படைத்தல்

## ➢ சமஸ்டி ஆட்சி

மத்திய அரசின் சட்டத்துறை நிர்வாகத்துறை நீதித்துறை அதிகாரங்களை பிராந்திய ஆட்சியாளர்களிடம் ஒப்படைத்து அதிகாரப் பங்கீடு செய்யப்பட்ட அரசு சமஷ்டி அரசு.

## ❖ சமஷ்டி அரசின் பண்புகள்

- எழுதப்பட்ட அரசியல் யாப்புக்கான காணப்படல்
- மத்திய மாநில அரசுக்கு உள்ள அதிகாரங்கள் அரசியல் யாப்பின் உள்ளடக்கப்பட்டு இருத்தல்
- அரசியல் யாப்புக்கு விளக்கம் அளிக்கும் அதிகாரம் உயர் நீதிமன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டு இருத்தல்
- சட்டவாக்க துறையில் மேல் சபை ஒன்று காணப்படுதல்

## ➢ சமஷ்டி அரசு ஒன்று வெற்றிபெறுவதற்கான இயல்புகள்

- அரசியல் யாப்புக்கு ஏற்ப செயற்படுதல்
- சகல இனக்குழுக்களும் தேசிய உணர்வுடன் செய்யப்படுதல்
- நிதி பணங்களை பங்கிடும் போது நேர்மையான முறையில் மாநில அரசுகளுக்கு வழங்குதல்

## ➢ சமஸ்டி அரசுகளின் புதிய போக்கு

மத்திய அரசு மாநில அரசுகளை வழிநடத்தும் தன்மை காணப்படுகின்றது

காரணங்கள்

- யாப்பு சீர் திருத்தங்களை மேற்கொள்ளும் போது மாநில அரசுகளின் விருப்பத்தை பெற்றாலும் பொதுவான சட்டங்களை உருவாக்கும் போது மாநில அரசுகளை உதாசீனம் செய்தல்
- இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் சர்வதேச அரசியலில் ஏற்பட்ட மாற்றம்
- தொடர்புகள் துரிதம் அடைந்தமை

  (தொடர்பாடல் போக்குவரத்து சேவைகள்)
- பிராந்திய அரசினால் மேற்கொள்ளப்படும் நலன்புரி நடவடிக்கைகளை அதிகரிக்கும் போது அதன் பொறுப்புக்கள் மத்திய அரசு மீது சுமத்த படல்

## ❖ ஒற்றை ஆட்சி

| எல்லா வகையிலும்அரசியல் அதிகாரம் ஒரு மத்திய அதிகார பீடத்தில் மையப்படுத்தப்பட்ட இருப்பின் அது ஒற்றையாட்சி முறை ஆகும் |
|---|
| - பேராசிரியர் ஹார்மன் ஜே. பைனர் |

## நிலவும் நாடுகள்

- இலங்கை
- ஐக்கிய ராஜ்யம்
- பிரான்ஸ்

❖ ஒற்றையாட்சியின் பண்புகள்

- சட்டம் இயற்றுவது தொடர்பான உயர் நிறுவனமாக செயற்படுவதே மத்திய அரசின் சட்டத்துறை ஆனா பாராளுமன்றம் ஆகும்
- உள்ளூராட்சி நிறுவனங்கள் வரையில் அதிகாரப் பரவலாக்கம் செய்யப்பட்டிருக்கும்

    உதாரணம் இலங்கை மாநகரசபை நகரசபை பிரதேச சபை

- அரசின் இறைமை அதிகாரம் ஓரிடத்தில் குவிந்து இருக்கும்
- சட்டத்துறை நிறைவேற்றுத்துறை நீதித்துறை என்னும் அரசின் முத்திரை அதிகாரங்கள் மத்திய அரசின் மையப்படுத்தப்பட்ட இருக்கும்

❖ ஒற்றையாட்சியின் நன்மைகள்

- பல்லின சமூக அமைப்பு இல்லாத நாடுகளுக்கு பொருத்தமானது
- மத்திய அரசு மாநில அரசுகள் இன்மையால் முரண்பாடுகள் ஏற்படுவதற்கான வாய்ப்பு குறைவு
- நிறைவேற்று துறையும் நீதித்துறையும் முழு நாட்டிற்கும் பொதுவானது

➢ சமஸ்டி அரசு

வேற்றுமையில் ஒற்றுமை காண்பதற்கு வழி வகுக்கும் ஆட்சி முறையாகும். – ஏ. வி. டைசி

தத்தமது அதிகார எல்லைக்குள் சுயாதீனமாக செயற்பட முடிந்த போதிலும் சில விடயங்கள் தொடர்பாக ஒற்றுமையுடன் செயல்படுவதற்கும் வழிவகுக்கும் நிலைமை - கலாநிதி கே சி.வியர்

❖ சமஸ்டி ஆட்சியின் அனுகூலங்கள்

- பல்லின சமூகம் ஒன்றில் பல்வகைமை மதிப்பளிக்கும் வகையில் பொது தேசியம் ஒன்றை கட்டி எழுப்புதல்
- பரந்த நிலப்பரப்பில் காணப்படும் அரசுகளில் நிர்வாக ரீதியிலான தீர்மானங்களை இலகுவாக மேற்கொள்ளக் கூடியதாக இருத்தல்
- ஓர் அரசு கட்டளையிடும் வகையில் ஏற்படுவதை தவிர்க்க முடியுமாய் இருத்தல்
- ஜனநாயக ஆட்சி சக்தி வாய்ந்ததாக காணப்படும்

- அதிகாரங்கள் தொடர்பில் மாநில அரசுகள் அதிருப்தியுடன் செயற்படுதல்
- மாநில அரசுகள் மத்திய அரசிலிருந்து விலகி செல்லும் போக்கு காணப்படுதல்
- மத்திய மாநில அரசுகள் யாப்பின் மூலம் தேர்வுகளுக்கு வரும்போது சில துறைகளில் ஏற்படும் பிரச்சனைகளால் நிர்வாகம் ஸ்தம்பிதம் அடைதல்
- இரண்டாம் மன்றம் ஒன்று செயல்படுவதால் சட்டவாக்க நடவடிக்கைகள் தாமதமடையும்
- மாநில நிர்வாகம் தொடர்பில் அனுபவமும் ஆற்றலும் மிக்க அதிகாரிகளுக்கான பற்றாக்குறை நிலவுவதால் நிர்வாக முறை சீர்கெடல்

# இலங்கையின் அதிகாரப் பகிர்வு மற்றும் அதிகார பன்முகப்படுத்தல் தொடர்பான வரலாறு

## இலங்கையின் அதிகாரப் பரவலாக்கம்

- ஆரம்ப காலத்திலிருந்தே இலங்கையில் அதிகார பரவலாக்கம் காணப்பட்டது

  உதாரணம்

  - அனுராதபுரர காலத்தில்பண்டுகாபய மன்னன் காலத்தில் கிராமா நிர்வாகத்திற்கு பொறுப்பானவர்கள் கம்பார காமினி போன்ற அதிகாரிகள்

  - பொலநறுவை காலத்தில் மகா பராக்கிரமபாகு மன்னன் பிரதேச ஆட்சியாளர்களை நியமித்தமை
  - ஐரோப்பியர் காலத்தில் பல நிர்வாக அதிகாரிகள் பிரதேச அலகு நிர்வகிக்கப்பட்ட மை

### பிரித்தானியர் ஆட்சியின் போது இலங்கையின் அதிகாரப் பரவலாக்கம் செய்யப்பட்டிருந்த விதம்

- ✓ 1865 மாநகர கட்டளைகள் சட்டம்

  1865 கொழும்பு மாநகர சபை. 1866 கண்டி மாநகர சபை

- ✓ 1871 கிராமசபை முறை மீண்டும் அறிமுகம்
- ✓ 1924 கிராமசபை கட்டளைச் சட்டம்
- ✓ 1931 கிராம சபைகளின் அதிகாரம் அதிகரிக்கப்பட்டன
- ✓ 1940 நகர சபைகளின் உருவாக்கம்
- ✓ 1943 உள்ளூராட்சி மன்ற கட்டளைச்சட்டம்

## சுதந்திரத்தின் பின்னர் அதிகாரப் பரவலாக்கம்

- தொடர்ந்தும் உள்ளூராட்சி மன்றங்களின் செயல்பாடு
- 1973 அரசியல் அதிகார சபையின் உருவாக்கம்
- 1980 மாவட்ட சபைகளின் அறிமுகம் அதனூடாக கிராமசபை சிறு நகர சபைகள் நீக்கப்பட்டன
- 1981 கிராம சபை சிறு நகர சபைகளின் நிர்வாக அதிகாரங்கள் பிரதேச சபைகள் கிராமோதய சபைகள் மூலம் மேற்கொள்ளப்பட்டன
- 1987 பிரதேச சபைகள் நிறுவப்பட்டன

## இலங்கையில் அதிகார பங்கீடு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பிராயத்தனங்கள்

- 1926 S.WR.D. பண்டாரநாயக்கா அவர்களால் மலைநாட்டுப் பகுதிக்கு சமஸ்டி ஆட்சியை தேவை பற்றிய கருத்து
- 
- 1957 ஆம் ஆண்டு S.W.R.D.பண்டாரநாயக்க S.J.V.செல்வநாயகம் ஆகியோரின் பண்டா - செல்வா ஒப்பந்தம்
- 
- 1965 ஆம் ஆண்டு டட்லி சேனாநாயக்க செல்வநாயகம் ஆகியோரின் டட்லி -செல்வா ஒப்பந்தம்

### இலங்கையில் மாகாண சபைகள் அமைக்கப்படுதல்

### சட்டங்கள்

- 1978 ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு யாப்பில் ஏற்படுத்தப்பட்ட பதிமூன்றாம் சட்ட சீர்திருத்தம்
- 1987 ஆம் ஆண்டு 42 ஆம் இலக்க பாராளுமன்ற கட்டளைகள் சட்டம்(

## 1978ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் xvii (அ) தலைப்பின் கீழ் குறிப்பிடப்பட்ட விடயம்

ஜனாதிபதியால் வர்த்தமானியில் வெளியிடப்படும் நியதி ஒன்றின் மூலம் குறிப்பிடப்படும் திகதியிலிருந்து அல்லது திகதிகளில் இருந்து எட்டாவது

ஒரு தலைப்பில் குறிப்பிடப்படும் எல்லா மாகாணங்களுக்கு காகவும்அரசியல் யாப்பின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்ட வகையில் மாகாண சபை அமைக்கப்பட்டுள்ளது.

## எட்டாம் உப தலைப்பின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள மாகாணசபைகள்

- வடமாகாண சபை
- கிழக்கு மாகாண சபை
- மேல் மாகாண சபை
- மத்திய மாகாண சபை
- வடமத்திய மாகாண சபை
- வடமேல் மாகாண சபை
- ஊவா மாகாண சபை
- சப்ரகமுவ மாகாண சபை
- தென் மாகாண சபை

## மாகாணசபை ஒன்றின் நிறுவன கட்டமைப்பு

ஆளுநர்

முதலமைச்சர்

***அமைச்சரவை***

***மாகாணசபை***

***ஆளும் கட்சி*** ***எதிர்க்கட்சி***

## மாகாண ஆளுநர்

- மத்திய மற்றும் மாகாண சபைகளுக்கு இணைப்பாளராக செய்யப்படுவார்
- ஜனாதிபதியால் நியமிக்கப்படுவார்
- பதவிக்காலம் ஐந்து வருடங்கள்
- தானாக விரும்பினால் பதவியை ராஜினாமா செய்யலாம்
- மாகாண சபை உறுப்பினர்கள் 2/3 பெரும்பான்மை உறுப்பினர்களின் சம்மதத்துடன் நிறைவேற்றப்பட்ட பிரேரணையை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்து ஆளுநரை பதவியிலிருந்து நீக்கலாம்.

## ஆளுநரின் அதிகாரங்களும் பணிகளும்

- மாகாணசபையை கூட்டுதல், தவறுகளை மூடி வுருத்தல், கலைத்தல்
- மாகாண சபையில் உரையாற்றுதல் மற்றும் செய்திகளை அனுப்புதல்
- முதலமைச்சரை நியமித்தல் அமைச்சரவை மாகாண சபை நிர்வாக அதிகாரிகளை நியமித்தல்
- மாகாணசபையின் கொள்கைகளை அனுமதித்தல்
- அவசரகால நிலைமையின் போது ஜனாதிபதியின் ஆலோசனையின் பெயரில் செயற்படுதல்.
- மாகாணசபையின் முதலமைச்சரின் ஆலோசனைப்படி செயற்படுதல்

## முதலமைச்சரும் அமைச்சரவையும்

- ✓ ஒவ்வொரு மாகாண சபையும் ஒரு முதலமைச்சரையும் நான்கிற்கு மேற்பட்ட அமைச்சரவையையும் கொண்டிருக்க வேண்டுமென 1978ஆம் ஆண்டு அரசியல் யாப்பு குறிப்பிடுகின்றது
- ✓ .முதலமைச்சரை ஆளுநர் நியமனம் செய்வார்.
- ✓ முதலமைச்சரின் ஆலோசனைப்படி ஏனைய அமைச்சர்கள் நியமிக்கப்படுவர்.

## முதலமைச்சர் அமைச்சரவையின் அதிகாரங்களும் பணிகளும்

- மாகாண ஆளுநருக்கு ஆலோசனை வழங்குதல்
- மாகாண வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்தல்
- வானத்தின் பொருளாதார அபிவிருத்தி நிர்வாகத் திட்டமிடல் என்பவற்றை தயாரித்து அவற்றை நடைமுறைப்படுத்த லும்

## மாகாண சபை

### யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம்

154 (அ) 1 உப தலைப்பின் கீழ் என்னா மாகாண சபைகளும் மாகாண சபைத் தேர்தல் சட்டத்தை கேட்ப சபைக்கான பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவதன் மூலம் உருவாக்கப்படும்.

- மாகாணத்தின் பரப்பளவு சனத்தொகையை என்பவற்றின் அடிப்படையில் சட்டத்தால் எடுக்கப்படும் முடிவின் பிரகாரம் பிரதிநிதி தொகை தபதவிக் காலம் தீர்மானிக்கப்படும்.
- உரிய காலம் முடிவடைந்து மாகாணசபை கலைக்கப்படாது விட்டாலும் அது கலைக்கப்பட்டது ஆகவே கருதப்படும்
- பிரதிநிதிகள் பொது மக்களின் வாக்குரிமை ஆள் மட்டுமே தெரிவு செய்யப்படுவர்.

## மாகாணசபை ஒன்றின் அதிகாரங்களும் தொழிற்பாடுகளும்

1978ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் 13வது திருத்தத்தின் படி மூன்று நிலைகளில் அதிகாரங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

- 1 வது நிரல் (மாகாண சபைக்குரிய அதிகாரம்)
- 2 வது நிரல் (மத்திய அரசுக்கு உரிய அதிகாரங்கள்)
- 3 வது நிரல் (மத்திய அரசு மாகாண சபைக்குரிய அதிகாரங்கள்)

## முதலாம் நிரல் (மாகாண சபைக்குரிய அதிகாரங்கள்)

மாகாண சபைக்குரிய 37 அதிகாரங்களும் பணிகளும் குறிப்பிடப்பட்டுள்ளன.

உதாரணங்கள்

- மாகாணத்தின் பொருளாதாரத் திட்டமிடல
- உள்ளூராட்சி மன்ற நடவடிக்கைகள்
- மாகாண வீடமைப்பு அபிவிருத்தியும்
- சமூக சேவைகளும் புனர்வாழ்வு
- மாகாண விவசாய நடவடிக்கைகள்
- சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள்
- புனரமைத்தல் நிர்வகித்தல்

## இரண்டாம் நிரல் (மத்திய அரசுக்கு உரிய அதிகாரங்கள்)

மத்திய அரசுக்கு 17 அதிகாரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

உதாரணங்கள்

- எல்லா விடயங்களும் செயற்பாடுகளும் தொடர்பான தேசிய கொள்கை உருவாக்கம்
- வெளிவிவகார நடவடிக்கை
- தேசிய வருமானத்திற்கும் நிதி கொள்கைக்கும் மற்றும் வெளிநாட்டு வழங்குமாறு நிதி நடவடிக்கைகள்
- நீதிமன்றத்திற்கும் நீதிமன்ற தொகுதிக்கும் கீழ்ப்பட்ட வகைகள் நீதியை அனுபவித்தல்
- குடிவரவு குடியகல்வு மற்றும் குடியுரிமை
- சனத்தொகை மற்றும் புள்ளி விவரங்கள்

## மூன்றாவது நிரல் (இணைந்து நிறைவேற்றும் பணிகள்)

மத்திய அரசு மாகாண சபைக்கும் இணைந்து அனுபவிக்கும் அதிகாரங்கள் 36 ஆகும்.

உதாரணங்கள்

- திட்டமிடல்
- தேசிய வீடமைப்பு நிர்மாணம்
- சமூக சேவைகளும் புனர்வாழ்வும்

- விவசாயமும் கமநல சேவை யும்

## உள்ளூராட்சி மன்றங்கள்

இலங்கையில் குறிப்பிட்ட நிலப் பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்டு மக்களினதும் மக்கள் பிரதிநிதிகளின் அதும் பங்களிப்புடன் பொதுமக்களின் தேவைகளை பூர்த்தி செய்ய உள்ளூராட்சி மன்றங்கள் உதவுகின்றன.

| | |
|---|---|
| மாநகர சபை. | நகர பிதா,உப நகர பிதா |
| நகரசபை. | தலைவர்/ உபதலைவர் |
| பிரதேச சபை. | தலைவர்/உபதலைவர் |

## நகர பிதா (தலைவர்)ஒருவரின் அதிகாரங்களும் பணிகளும்

- மாநகர நகர பிரதேச சபைகளை நிறைவேற்று அதிகாரியாக செயற்படுதல்
- சபைக் கூட்டத்திற்கு அழைப்பு விடுத்தல் தலைமை வகித்தல் ஒத்தி வைத்தல்
- வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்தல் அதற்கு சபையின் அனுமதியை பெறுதலும்
- தனது நிர்வாக பிரதேசத்திற்கு உரிய அபிவிருத்தியை திட்டமிடலும் செயற்படுத்தலும்
- மக்கள் பயன்பாட்டுக்கான சேவைகளை வழங்குவதில் முன்நின்ற செயற்படுதல்

## உப நகர பிதா(உபதலைவர்) ரின் அதிகாரங்களும் பணிகளும்

- தான் சார்ந்த உள்ளூராட்சி சபைக்கு தலைவருக்கு உதவியாக செயல்படுதல்
- தலைவர் இல்லாத சந்தர்ப்பத்தில் தலைமை தாங்குதல்

## பொதுச்சபை

- *உள்ளூராட்சி மன்றம் ஒன்றின் கொள்கையை உருவாக்கம் செய்யும் அலகு*
- *உள்ளூராட்சி மன்ற எல்லைக்குள் வாழும் வாக்காளர்களால் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகள் கொண்டிருக்கும்.*
- *தலைவர் உபதலைவர் பதவிகளை தெரிவு செய்யும்*
- *வரவு செலவுத்திட்டத்தை அனுமதிக்கும்*
- *நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ள தலைவர் நகரபிதா அவருக்கு உதவியாக இருத்தல்*

# ஐக்கிய அமெரிக்கா

## ஐக்கிய அமெரிக்காவில் சமஸ்டி அரசு

- 13 குடியேற்றங்கள் உடன் ஆரம்பித்து 50 மாநிலங்களை கொண்டு விளங்குகின்றது.
- குடியரசாக ஒன்றிணைந்த மைய செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்
    1. தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தல்
    2. பொருளாதார அபிவிருத்தி
- மீண்டும் பிரித்தானியாவின் குடியேற்ற நாடாக விரும்பாமை
- 1787 அரசியல் யாப்பில் அதிகாரப் பங்கீடு குறிப்பிடப்படுகின்றது

### ஐக்கிய அமெரிக்காவின் அரசியல் கட்டமைப்பு

- ✓ நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி
- ✓ சட்டத்துறை காங்கிரஸ் சபை பிரதிநிதிகள் சபை எனும் இரட்டை மன்றமாக செயல்படுதல்
- ✓ ஜனாதிபதி சில அதிகாரங்களை நடைமுறைப்படுத்தும் போது சபையின் அனுமதி பெறல்
- ✓ மத்திய மாநில அரசுகளுக்கு இடையில் அதிகாரங்களை செயற்படுத்தும் போது பிரச்சினை ஏற்பட்டால்அதனை உயர்நீதிமன்றம் தீர்க்கும்
- ✓ ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் செனட் சபைக்கு இரண்டு பிரதிநிதிகள் நியமிக்கப்படுவர்
- ✓ காங்கிரஸ் உருவாக்கும் சட்டம் அரசியல் யாப்பு டன் முரண்படும் ஆயினும் அதனை ரத்து செய்யும் அதிகாரம் உயர்நீதிமன்றத்திற்கு இருக்கின்றது.
- ✓ அரசியல் யாப்பை மாற்றம் செய்ய மத்திய அரசின் 2/3 பெரும்பான்மையும் மாநில அரசின் ¾ பெரும்பான்மையும் தேவைப்படுது

### ஐக்கிய அமெரிக்காவில் அதிகாரப் பங்கீடு செய்யப்பட்டுள்ள விதம்

#### மத்திய அரசுக்கு உரிய அதிகாரங்கள்

- வரி அளவிடலும் அறவீடும்
- டிடி நடவடிக்கை
- தேசிய பாதுகாப்பை திட்டமிடல்
- வெளிநாட்டு வர்த்தகமும் வெளிநாட்டு விவகாரமும்

- தேசிய பொருளாதார அபிவிருத்தி

மாநில அரசுக்குரிய அதிகாரங்கள்

- கல்வி
- சுகாதாரம்
- வீடமைப்பு
- உள்ளுராட்சி பெருந்தெருக்கள்

### தற்காலத்தில் ஐக்கிய அமெரிக்காவில் மாநில அரசுகளை விட மத்திய அரசு பலம் பெற்று திகழ்ந்த தற்கான காரணங்கள்

- அரசியல் பொருளாதார சமூகப் பிரச்சினைகளின் சிக்கல் வாய்ந்த தன்மை
- இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் சர்வதேச ரீதியாக ஏற்பட்ட அரசியல் போட்டி
- நிதி தொடர்பாக மத்திய அரசு பலம் பெறும்

# சுவிட்சலாந்து சமஸ்டி அரசாக எழுச்சி அடைதல்

## சமஷ்டி அரசு உருவாவதற்கான காரணங்கள்

- பிரான்ஸ் ஜெர்மனி இத்தாலி ஆஸ்திரியா ஆகிய நாடுகளுக்கு மத்தியில் அமைந்திருந்ததால் தேசிய பாதுகாப்பை கவனத்தில் கொண்ட மை
- அதிகளவு தரைத்தோற்ற வேறுபாடு காரணமாக பொருளாதார அபிவிருத்தியை அடைவது கடினமாக இருந்தமை
- இன மொழி சமய வேறுபாடு களுக்கு தீர்வு காண வேண்டிய நிலைமை

- பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியில் கத்தோலிக்க புரட்டஸ்தாந்து சமயங்களுக்கு இடையே சிவில் யுத்த நிலை தோன்றியபோது சமஸ்டி ஆட்சி முறை மூலம் அது தீர்க்கப்பட்டது.
- 41300 சதுர கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்ட சுவிட்சர்லாந்து ஜெர்மன் பிரெஞ்சு இத்தாலிய உரோமானிய மொழிகளைப் பேசுகின்ற மக்களைக் கொண்ட நாடாகும். இம்மொழிகள் யாவும் அரச கரும மொழிகள்
- 150 வருடங்களுக்கு முன்னர் அரசியல் யாப்பு உருவாக்கப்பட்டது.
- இறுதியாக 1999ம் ஆண்டு திருத்தம் செய்யப்பட்டத
- கென்றன் எனப்படும் 26 மாநில அரசுகள் நிலவுகின்றன

### சுவிட்சலாந்து சமஸ்டி முறையில் அரசியல் கட்டமைப்பு

- சமஸ்டி பேரவை எனும் இரட்டை மன்றம் செயல்பாடுதல்
    - தே சிய சபை
    - அரச சபை

- ✓ நிறைவேற்றுத்துறை ஆனது 7 பேரைக் கொண்ட ஒரு குழுவாகச் செயற்படுகின்றது. குழு அங்கத்தினர் சமஸ்டி பேரவையால் நியமிக்கப்படுவர்.
- ✓ நிறைவேற்றுக் குழு வினர் சமஸ்டி சபை என்று அழைக்கப்பட்ட அச்சபையில் தலைவர் ஒருவர் செயற்படுவார்

### மத்திய அரசின் அதிகாரங்கள்

- வெளிவிவகாரம்
- போர் சமாதானம் என்பவற்றை பிரகடனப்படுத்தல்
- வெளிநாடுகளுடன் ஒப்பந்தங்கள் செய்தல்
- பாதுகாப்பு மற்றும் இராணுவ நடவடிக்கை
- தகவல் பரிமாற்றம் தபால் தந்தி சேவை

## கெண்ரன்ககுரிய அதிகாரங்கள்

- கல்வியும் உயர் கல்வியும்
- செய்திப் பத்திரிகை கட்டுப்பாடு
- பெரும் தெருக்கள்
- கைத்தொழில்
- சமயங்கள்
- தொற்றுநோய்களை தடுத்தல்
- வங்கி நடவடிக்கை

## சுவிட்சலாந்து சமஷ்டி முறையின் சிறப்பு இயல்புகள்

- ➢ மத்திய அரசுக்கும்கன்றன் அரசுக்குமான அதிகாரங்கள் யாப்பில் கூறப்பட்டுள்ளது
- ➢ அதிகாரங்களை செயற்படுத்தும் போது பிரச்சினை ஒன்று உருவாகும் ஆனால் அதனைத் தீர்க்கும் அதிகாரம் சமஸ்டி பேரவைக்குறியது
- ➢ கன்றன்களுக்கு தமது அதிகாரத்தை செயற்படுத்துவதில் சுயாதீனமாக செயற்பட முடியாது
- ➢ கண்ரன் அரசுகள் தீர்மானம் மேற்கொள்ளும் போது மக்கள் கருத்துக்களைக் கூறுவதற்கு நேரடி ஜனநாயக முறைகளை பிரயோகிக்க முடியும்.